Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி — National Tamil Daily

மலர் 9 (11-1-67) இதழ் 332

பராபவ றமழான் 29 மார்கழி 27 புதன்கிழமை

# "ஒழுங்கீனமாக நடந்து கொள்ளாதீர்கள்"

## டாக்ஸி சாரதிகளுக்கு பொலிஸ் சுப்ரிண்டன்ட் புத்திமதி

யாழ்ப்பாணம், புதன்

"கடந்த ஆண்டில் அகில இலங்கையிலுமே நடைபெற்ற பல அசம்பாவிதமான சம்பவங்களிலும் டாக்ஸி சாரதிகள் அதிகமாகத் தொடர்பு கொண்டவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்படியாக இனிமேல் டாக்ஸி சாரதிகள் எவருமே நடந்துகொள்ளக்கூடாது. கள்ளக்கடத்தல், பெண் கடத்தல் போன்ற சம்பவங்களில் நீங்கள் ஈடுபடக்கூடாது. உங்கள் டாக்ஸிகளை வாடகைக்கு அமர்த்திச்சென்று இப்படியான தவறான வழிகளில் யாராவது உபயோகித்தால் அதனை நீங்கள் உடனே பொலிஸாருக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று வடமாகாண புதிய பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று யாழ்ப்பாணம் டாக்ஸி சாரதிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை இவர் கூட்டிய யாழ்ப்பாணம் டாக்ஸிச் சாரதிகள், சொந்தக்காரர்களுக்கான விசேஷ மாநாட்டிலேயே மேற்கண்டவாறு டாக்ஸி சாரதிகளுக்குச் சொன்னார். இம்மாநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 70 டாக்ஸி சாரதிகளும், சொந்தக்காரர்களும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணத் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜொஸ்லோ, போக்குவரத்துப் பொலிஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன சபை

# தமிழருக்கும் இடம்

## திரு. அரங்கநாதன் நியமிக்கப்படலாம்

கொழும்பு, செவ்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபையில் மற்றொரு அங்கத்தவராக திரு. ஸி. அரங்கநாதன் சி.யு. ஸி. நியமிக்கப்படக் கூடுமென அறியப்படுகிறது. ஒலிபரப்புச் சபைக்கு நியமிக்கப்பட்ட ஐவரில் தமிழர் எவரும் இடம் பெறாதது ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன தமிழ்ப்பிரிவு புறக்கணிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும், 'ஈழநாடு' மற்றும் இல பத்திரிகைகளும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இலங்கைவாழ் தமிழ்மக்களின் கலை, கலாசாரத்தைப் பாதுகாக்கவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிகளின் விருத்திக்காகவும் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபையில் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கோரியதைத் தொடர்ந்து கூட்டுஸ்தாபன சபையில் தமிழர் ஒருவரை நியமிக்க தகவல் ஒலிபரப்பு அமைச்சு முடிவு செய்திருப்பதாகவும் பிரபல வழக்கறிஞரும் கலை, கலாசாரத்தில் பயிற்சியும் தேர்ச்சியுமுள்ளவருமான திரு. ஸி. அரங்கநாதனை நியமிக்கக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

## கிளிநொச்சியில்

## மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்த நடவடிக்கை

கிளிநொச்சி, செவ்வாய்.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள மாணவர்களின் கல்வித் தராதரத்தை உயர்த்துவது குறித்து இங்குள்ள மகா வித்தியாலயங்களின் அதிபர்களும் உதவி அதிபர்களும் கொண்ட மகாநாட்டை கிளிநொச்சி எம்.பி. திரு. கா. பொ. இரத்தினம் அண்மையில் கூட்டினார். இக்கூட்டத்தில் வித்தியாலயங்களுக்கு வேண்டிய ஆசிரியர்களும் உபகரணங்களும் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி எம்.பி. திரு கா. பொ. இரத்தினம், வடபகுதி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. தணிகாசலம் கிளிநொச்சி வித்தியாதரிசி என். சிவலிங்கம் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் ஆசிரியர்கள் பெற்றோருடன் தொடர்பு கொண்டு பாடசாலைகளின் கல்வித்தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் உதவி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதை அதிபர்கள் நன்கு கண்காணிக்க வேண்டும் என்றும் இதன் மூலமே கல்வியை விருத்தி செய்ய இலகுவாக இருக்கும் என்றும் கூறினார்.

1967 ஆண்டு முதல் உருத்திரபுரம் மகாவித்தியாலயம், பளை மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் ஜீ.சி.ஈ.(உயர்தரம்) புதுமுக வகுப்புகள் வைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## 'எமது பிரதான வேலை உணவுப்பிரச்னையை தீர்ப்பதே'

### கி.மு.சங்க ஆண்டுவிழாவில் வவுனியா எம்.பி.

வவுனியா, செவ்.

"கிராம முன்னேற்றச் சங்கங்கள் வெறுமனவே இருந்தால் மட்டும் போதாது. நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கும் உணவுப் பிரச்னையைப் பிரதான வேலையாகக் கொண்டு நாட்டுக்குத் தேவையான நெல்லை உற்பத்தி செய்வதில் ஈடுபடல் வேண்டும். எமது நாட்டில் இன்று ஏராளமான வயல் நிலங்கள் செய்கைபண்ணுமல் இருக்கின்றன. இந்த நிலங்களை தகுந்தமுறையில் பயன்படுத்தினுல் பண்டைய காலத்தில் வவுனியா நெற்களஞ்சியமென்னும் பெயரை மீண்டும் பெற்றுவிடும்."

இவ்வாறு நேற்று நடைபெற்ற ஓமந்தை, நம்பைக்குளம் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் 14-வது ஆண்டு விழாவில் வவுனியா எம்.பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினார். நம்பைக்குளம் சந்தியில் இருந்து ஊர்வலமாக வவுனியா எம்.பி. திரு. ரி. சிவசிதம்பரம், வவுனியா மேற்கு தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம், கிராம முன்னேற்றச்சங்க உத்தியோகத்தர் திரு கே. சிவகுருநாதன் ஆகியோர் கூட்டமைதானம் வரைக்கும் பொதுமக்களால் அழைத்துவரப்பட்டார்கள்.

அவர் மேலும் பேசுகையில், "நாம் கூட்டங்களில் கூறிவிடுவதும், துண்டுப் பிரசுரம் வெளியிடுவதும் உணவு உற்பத்தியைப் பெருக்காது. சகலரும் வயலில் இறங்கி நல்ல முறைகளைக் கையாண்டு கூடிய விளைச்சலைப் பெருக்க வேண்டும். எமது நாட்டுக்குத் தேவையான பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றைப் பயிரிட இங்கு மண்ணிருந்தும் பலரும் முன்வராமல் இருப்பது கவலை தருகிறது" என்றும் அவர் கூறினார்.

திருவாளர்கள் எஸ். கந்தையா, பூ. சிதம்பரப்பிள்ளை, எஸ். கணேசவேல், என். பூரணலிங்கம், கே. சிவகுருநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

புதுவருட உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்- திரு. எஸ். செல்லையா, உபதலைவர்- திரு. எஸ். சுப்பிரமணியம், காரியதரிசி திரு. எஸ். துரைராசா, உபகாரியதரிசி- என். காறத்தான், தனாதிகாரி- ரீ. ஏ. ஆசிநாதன், கணக்குப் பரிசோதகர் எஸ். சின்னத்துரை.

கிராம முன்னேற்றச்சங்கத்தில் தொடர்ந்து 14 வருடமாக தலைவராக இருந்த திரு. எஸ். சின்னத்துரை வாலிபர்களுக்கு

## அகில இலங்கை மாணவர் வேலைத்திட்டதினம்

### உப உணவுப் பொருள்களை பயிரிடுவதில் மாணவர் ஈடுபடுவர்

மானிப்பாய், செவ்வாய்

அகில இலங்கை மாணவர் வேலைத்திட்ட தினம் 12ம் திகதி நடைபெறுவதை முன்னிட்டு, வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யும் பொருட்டு சுத்தரோடை, சண்டிலிப்பாய், கட்டுடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கல்லூரி, பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் சுத்தரோடைக் கல்லூரியில் கூடி, திரு. கி. சுப்பிரமணியத்தைத் தலைவராகவும், திரு. எஸ். ஆறுமுகத்தைச் செயலாளராகவும், திரு. முருகேசம்பிள்ளையைப் பொருளாளராகவும் கொண்ட தீர்வாகக் குழுவைத் தெரிவுசெய்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களினதும், விவசாய உத்தியோகத்தவரதும் உதவியுடன் உப உணவுப் பொருட்களைப் பயிரிடுவதென்றும் பிரதானமாக மிளகாய் உற்பத்தியில் அதிக ஊக்கமெடுப்பதற்கு மிளகாய்க் கன்றுகளை வழங்குவதோடு, தங்க நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குக் கொண்டுவருவதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானித்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று நடைபெறும் சிரமதானம்

### பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்வர்

வவுனியா, புதன்

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும் இன்றும் நாளையும் மாபெரும் சிரமதான உணவு உற்பத்தியில் ஈடுபடுவார்கள்.

இந்தச் சிரமதான இயக்கத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சிகளில் வவுனியா அரசாங்க அதிபர், வவுனியா கல்வி அதிகாரி, வித்தியாதரிசிகள், விவசாயப் பகுதி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார்கள்.

## இதுவன்றோ பொதுச் சேவை

அளவெட்டி, செவ்

தெல்லிப்பழை அளவெட்டி வீதியில் நேற்று முன்தினமிரவு முத்தையா சிவன் என்பவர் நாகபாம்பினால் தீண்டப்பட்டு அதே இடத்தில் மயங்கிக்கிடந்தபொழுது எதிர்பாராதவிதமாக வீதி வழியாக வந்த செ. சண்முகவடிவேல் என்பவர் தனது காரில் மயக்கமுற்ற நிலையில் இருந்த நபரை மாவிட்டபுரம் விஷகடி வைத்தியரிடம் ஒப்படைத்ததாகச் சொல்லப்படுகிறது. அன்று இரவுமுழுவதும் கடுமையான சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மயக்க நிலையில் இருந்த அவர் சிறிதுகுணமடைந்துள்ளார்.

பம் அளிக்கும் முகமாக தனது பதவியை ராஜினாமா செய்தார் என்று அறிவிக்கப்பட்டது.

## ஆங்கிலக் கல்வியில் அதிக அக்கறை

### தேசியகல்விச்சபை தீர்மானம்

கொழும்பு, செவ்

சர்வகலாசாலையில் உயர் கல்வி பெறுவதற்காக வரும் மாணவமாணவியர் போதிய ஆங்கில அறிவு இல்லாதிருந்து தலைப்பாடங்களையும் விரிவுரைகளையும் விளங்கிக் கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாந்தரப் பாடசாலை மட்டத்திலிருந்து ஆங்கிலக்கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை உயர்தர தேசிய கல்விச் சபை முடிவு செய்துள்ளது. இந்தத் தீர்மானத்தை வித்தியாதிபதிக்குத் தெரிவித்து

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்**
இனம் பிரிக்கப்படாத (ஒருநாள் குஞ்சுகள் Unsexed) பதிவு செய்யாது பெற்றுக் கொள்ளலாம். விலைசதம் எழுபத்தைந்து (75) அடு ஏஜன்ஸீஸ். அளவெட்டி. 2207

**கோழிகள்**
முட்டையிடும் வெள்ளை லெக்கோன் கோழிகள் விற்பனைக்குண்டு. வேண்டுவோர் வே. சண்முகநாதன், கைப்பாவளூர், காரைநகர் என்ற விலாசத்தில் பார்க்கவும். 2240

**சங்கீதக் கருவிகள்**
வயலின், சுருதிப்பெட்டி, ஹார்மோனியம், கிற்றார் முதலிய இசைக் கருவிகளும் அவற்றுக்கான உறுப்புக்களும் நிதானமான விலைக்கு விற்கப்படும். 32, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2311

**வான்**
A 30 டிவிஷன் வான். CV 5018. நல்ல நிலையில். நேரில் வரவும். கே. இராசலிங்கம், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 2242

## காணவில்லை

ஐயாத்துரை தவலிங்கம் என்ற 15 வயதுடைய எனது மருமகனை இம்மாதம் 8-ம் திகதியிலிருந்து காணவில்லை. இவர் காணாமற்போன சமயத்தில் நீலநிறக் காற்சட்டையும் வெள்ளை ஷேர்ட்டும் அணிந்திருந்தார். இவரது இடதுகண்ணுக்குக் கீழ் ஒரு தழும்புண்டு. பொது நிறமானவர். 4 1/2 அடி உயரமுள்ளவர். இவரைக் கண்டால் பொலிசுக்கு அறிவிக்கும்படி வேண்டுகிறேன். 2308

**சூட்கேஸ்:**
9-ந் திகதி இரவு யாழ்தேவியில் இருந்து சூட்கேஸ் ஒன்று புங்கன்குளம் ஸ்டேசனுக்கும் யாழ்ப்பாணம் ஸ்டேசனுக்கும் இடையில் வெளியில் விழுந்துவிட்டது. முக்கிய பத்திரங்கள் இருப்பதால் இதைக் கண்டெடுப்போர் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் சேர்க்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கி. இரத்தினராசா, 668, காங்கேசன்துறைவீதி. 2310

## தேவை

**சேல்ஸ்மென்**
'சைக்கிள் மார்க்கெட்' வியாபாரத்தில் 5 வருட அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. இதற்கு முன்னர் வேலைசெய்த இடங்களின் நற்சாட்சிப் பத்திரங்களுடன் 15-1-67க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். (வயது 25 - 35) நியூ ரோயல் எலெக்ரிக்கல்ஸ், 228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2238

**மனேஜர்**
பிரசம்பற்றை சரவணை வட. தோ. க. சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. சம்பளம் ரூபா 90/- (எல்லாம் உட்பட) வயது 20 தொடக்கம் 40 வரையும். தராதரம் J. S. C. கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலைப் பத்திரம் தேவை. பிணை ஆதனம் ரூபா 2,000/- ரொக்கம் ரூபா 1000/- இம்மாதம் 30-ம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, பிரசம்பற்றை வட. தோ. க. சங்கம், பண்டத்தரிப்பு. 2327

## கல்வி

**வகுப்புகள்**
ஆங்கிலத்தில் குறைவானவர்களுக்கென விசேஷ ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐடியல் கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 2285


யாதவா
(முளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

கௌதமா தியேட்டர்
நெல்லியடி
போயாதினமும் முதல் நாளும்
காலை 10 மணி மெட்னி
S.S.R.— விஜயகுமாரி
நடித்த
வழிகாட்டி


# "கூட்டுறவு நாட்டுயர்வு"

யாழ்ப்பாணம், புதன்
"கூட்டுறவு மனப்பான்மையுடன் வழிப்பழகினால் மக்கள் தங்களுக்கு வேண்டிய எதையுமே தாமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு கடந்த காலங்களில் நீங்கள் ஆற்றிய பெரும் சேவைகளே சான்று பகரும். 1962-ம் ஆண்டில் மிகவும் இக்கட்டான ஒரு கட்டத்தில் இச் சங்கத்தை ஆரம்பித்து, இன்று வரை ஒற்றுமையுடன் இருந்ததினாலேயே இச் சங்கத்தை நீங்கள் நன்கு வளர்க்க முடிந்துள்ளது".

இவ்வாறு யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிப் பேராசிரியரான திரு. போ. இங்கரிங்கம், பாஷையூர் அர்ச் அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்க புத்தாண்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார். மற்றும் பலரும் பேசினர். (ந. நி.)

# எண்ணெய்க் கிணற்றில் தீ

கௌஹாத்தி, ஜன. 10
அஸாமில் கடந்த செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் கிணறு ஒன்றில் ஏற்பட்ட தீ இன்னும் அணைக்கப்படவில்லை. இத்தீயைப் பரவவிடாமல் செய்வதில் நூற்றுக்குமதிகமான தீயணைக்கும் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்ய அதிகாரிகள் தலைமையில் தீயணைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# வானொலி

## கொழும்பு

புதன் 11-1-67

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வளை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கர்நாடக இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்மன்றம்.
இரவு 6-15 பாட்டு, 6-45 இராமசஞ்சிகை 7-15 வயலின் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 வீணை, 10-00 நேயர்விருப்பம்.


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
பாலும் பழமும்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
GUN HAWK
(Color by Delux)

REGAL—JAFFNA
NOW SHOWING
Richard Harrison
Golria Milland
in
PITILESS 3
(Eastman Color)


# வலி. மேற்கு கடைகளில் விநியோக பட்டியல்

சங்கானை செவ்.
வலி. மேற்கு கூ. மொ. வி. நிலையத்திலிருந்து கூப்பன் கடைகளுக்கு இவ்வாரம் கூப்பன் ஒன்றிற்கு 1 றாத்தல் மாவு, 3/4 அவுன்ஸ் மல்லி, 1/2 அவுன்ஸ் மிளகாய், 1 அவுன்ஸ் சர்க்கரை வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ் விநியோகம் தங்கள் கையிருப்பிலிருந்த அளவுக்குத் தக்கதாகவே பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. விற்பனவு நிலையத்திலிருந்து கொடுக்கப்பட்ட அளவு வீதம் கூப்பன் கடைக்காரர் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டுமென உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, கூட்டுறவு உதவி ஆணையாளர், வலி-மேற்குக் காரியாதிகாரி, சங்கானை பொலிஸ் அதிபர் முதலியோர் கைச்சாத்திட்ட அறிவித்தல் ஒன்றும் சகல கூப்பன் கடைகளுக்கும் விநியோகிக்கப் பட்டுள்ளது. இவ்வறிக்கை பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டுமென அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள்.

# நூல்நிலைய நிறுவ ஏற்பாடு

குரும்பசிட்டி, செவ்.
மல்லாகம், வலிகாமம் வடக்குப் பிரிவிலுள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் புதிய நூல் நிலையம் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை வலி. வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜம் ஏற்பாடு செய்து வருகிறது.

# தேசிய சேமிப்பு இயக்க விழா

குரும்பசிட்டி, செவ்.
யாழ்ப்பாண மாவட்ட தேசிய சேமிப்பு இயக்கத்தினரின் வருடாந்த விழா பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரித் திறந்த வெளியரங்கில் இம்மாதம் 23-ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. இவ்விழாவை நிதி அமைச்சர் திரு. யூ. பி. வன்னிநாயக்கா ஆரம்பித்து வைப்பார். யாழ். மாவட்டத்தில் தேசிய சேமிப்பு இயக்க வாரத்தை சிறப்பாக பல பகுதிகளிலும் நடாத்த வலி-வடக்குப் பிரிவுக் காரியாதிகாரி திரு. கி. முருகேசம்பிள்ளை தலைமையில் உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# சோவியத் போதனாசிரியர்கள் வருகின்றனர்

குரும்பசிட்டி, செவ்.
சோவியத் யூனியனிலிருந்து விளையாட்டுப் போதனாசிரியர்கள் இம்மாத இறுதிப் பகுதியில் இலங்கை வருகின்றனர். விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவின் விசேஷ அழைப்பின் பேரில் கைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் தேர்ச்சி பெற்றுள்ள சிறந்த பயிற்சியாளர்களே இங்கு வருகின்றனர். இத்தகவலை சோவியத் தூதராலய கலாச்சாரப் பிரிவு அதிகாரி திரு. குலுக்கோ தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 'மலாயா'!

புன்னாலைக்கட்டுவன், செவ்.
அண்மையில் நடைபெற்ற பொதுச் சாதாரண பத்திர உயர் நிலைப் பரீட்சை இலங்கைச் சரித்திர வினாப்பத்திரத்தில் 11-வது வினாவில் இலங்கையிலுள்ள இடங்கள் பல வரைபடத்திற் குறிக்கப்படவேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்தது. அதில் "மலாயா" என்ற இடமும் ஒன்று.

'மலாயா' என்பது இலங்கையின் மலைப் பிரதேசத்தைக் கருத்தில் வைத்தே குறிப்பிடப்பட்டது. ஆனால் தமிழில் 'மலாயா' என்றதும் பல தமிழ்ப் பரீட்சார்த்திகள் தமது புவியியல் அறிவைப் பரீட்சிப்பதற்காகக் கேட்கப்பட்டதோ என சந்தேகித்து அதை வரைப்படத்தில் குறிக்கவில்லையாம்.

# வதிரிக்கு தொலைபேசி இணைப்பு

உடுப்பிட்டி, செவ்.
பல வருடகால முயற்சியின் பின்னர் வதிரி உபதபாற்கந்தோருக்கு இம்மாத நடுப்பகுதியில் தொலைபேசித் தொடர்பு இணைக்கப்பட விருக்கிறது. "ஓட்டோ எக்சேஞ்" மூலமாக இத் தொலைபேசி இணைப்புச் சேவை நடைபெறும் இதற்கான "ஓட்டோ எக்சேஞ்" கட்டட வேலைகள் நெல்லியடியில் நடைபெற்று வருகின்றன.


கடைசி வாரம்
கிங்ஸ்லி
(கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, மாலை 6-30, 9-30
விஜேந்திரா
(அநுராதபுரம்)
முத்துராமன் - கே. ஆர். விஜயா
ஜெய்சங்கர், சுந்தரராஜன்,
(இருவேடங்களில்)
எல். விஜயலக்ஷ்மி
நடிக்கும்
பஞ்சவர்ணக்கிளி
இசை: விஸ்வநாதன் - இராமமூர்த்தி
டைரக்ஷன்: கே. சங்கர்

பொங்கல் திருநாளை
சிறப்பாகக் கொண்டாட
குதிரை மார்க்
வெடிகள் வெள்ளிப்பூந்திரிகள்
ரோமன் காண்டில்கள் (மத்தாப்பு)
ஈக்கில் வாணங்கள்
வெள்ளி விறிஸ்
முதலியவற்றை
உபயோகித்து மகிழுங்கள்!
தயாரிப்பாளர்:
ராணி வாணத் தொழிற்சாலை
ஏழாலை கிழக்கு 2173 சுன்னாகம்.

அலங்கார உற்சவ விளம்பரம்
புலோலி தெற்கு மந்திகை அம்மன் கோவில்
அன்புடையீர்,
எதிர்வரும் தை மாதம் 17-ந் திகதி திங்கட்கிழமை (30-1-67) தொடக்கம் 15 நாட்களுக்கு மந்திகையில் கோயில்கொண்டருளியிருக்கும் அம்மானுக்கு விசேஷ அபிஷேக பூசைகளும் அலங்காரத் திருவிழாவும் நடைபெறும்.
ச. கு. வயித்திலிங்கக்குருக்கள்.
2174


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனவில் குழப்பநிலை; மா-ஸே-துங்குக்கு எதிராக நாசவேலை?

## உற்பத்தி, போக்குவரத்துக்கள் சீர்குலைவதாக சீனவானொலி செய்தி

பிரேக், ஜன. 10

சீன கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் மா-ஸே-துங்கின் கலாசாரப் புரட்சி சீனவின் பல பகுதிகளிலும் இப்பொழுது குழப்பமானதொரு நிலைமையை உருவாக்கியுள்ளதாக இங்கு கிடைக்கும் ஏஜன்ஸி செய்திகள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

சீனவில் உள்நாட்டு யுத்தமொன்று ஏற்படுவது அசாத்தியமெனினும் மா-ஸே-துங்குக்கு எதிராக நாசவேலைகளை நடத்துவதில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதாக டோக்கியோவிலிருந்தும் மாஸ்கோவிலிருந்தும் வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனவின் பெரியதொரு நகரமான ஷங்காயில் மட்டுமின்றி நாங்கிங், காண்டன் போன்ற சீன நகரங்களிலும் இப்பொழுது மா-ஸே-துங் எதிர்ப்பலையைப் பெற்று வருகிறது. சீனவின் தென்கிழக்கு, தெற்குப் பகுதிகளில் அதிகமான குழப்பங்கள் தலைதூக்கியுள்ளதாக இங்கு கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் பெரும் மோதல்கள் நடைபெற்ற நாங்கிங் நகரத்தில் மீண்டும் கைகலப்புகள் மூண்டிருக்கின்றன. ஷங்காய் மாகாணத்தின் கிராமப் வீதிகளில் செங்காவலருக்கும் தொழிற்சாலை தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் துருப்புகள் குறுக்கிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி நிலைமையைச் சமாளித்ததாகவும் பரவலாக சட்டங்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனவின் சில பகுதிகளில் குழப்ப நிலைமை தோன்றியிருப்பதை சீன வானொலியும் அரசாங்கப் பத்திரிகைகளும் முதற்தடவையாக ஒப்புக்கொண்டுள்ளன. சீனப் பத்திரிகைகள் இதுகுறித்துக் கண்டனமும் வெளியிட்டுள்ளன.

காண்டனில் மீண்டும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டு செங்காவலர் பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் பலர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மா-ஸே-துங் எதிர்ப்பாளர்கள் பீகிங்கிலும், ஷங்காயிலும் உற்பத்தி, போக்குவரத்து ஆகியவற்றைச் சீர்குலைத்து வருவதாக சீன வானொலி தெரிவித்துள்ளது. ஷங்காயில் வேலை நிறுத்தங்கள் நடத்தி நாசவேலை செய்வதில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சீன வானொலி முதற்தடவையாக குற்றம்சுமத்தியுள்ளது.

சோவியத் யூனியன் அரசாங்க செய்தி ஸ்தாபனமான "டாஸ்" வெளியிட்ட ஒரு செய்தியில், சீனவில் பதற்றமான நிலைமை உருவாகியுள்ளதென்றும் மூன்று தினசரிப் பத்திரிகைகளை செங்காவலர் பொறுப்பேற்றுள்ளதாகவும் மா-ஸே-துங்குக்கு எதிராக இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவினர் இயங்கி வருவதாக செங்காவலர் குற்றம் சுமத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

## பம்பாயில் டெலிவிஷன்

பம்பாய், ஜன. 10

பம்பாயில் இவ்வருட இறுதிக்குள் டெலிவிஷன் நிலையம் அமைக்கப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டோடி நவாபின் திரை உலகப் பிரவேசம்

கல்கத்தா, ஜன. 10

இந்திய கிரிக்கெட் 'உலகில்' ஒரு நட்சத்திரமாக திகழ்ந்த பட்டோடி நவாப் விரைவில் இந்திய திரைப்படத்திலும் ஒரு நட்சத்திரமாகஜொலிக்க விருக்கிறார்.

"பிலிம் இன்டர் நெஷனல்" நிறுவனத்தாரின் "மோகம் மஹிவி ஜலம் மேம்" (சுண்டும் காதல்) என்ற படத்தில் பட்டோடி நவாப்நடிக்க விருக்கிறார்.

கிரிக்கெட் ஆட்டத்தை பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட விருக்கும் இப்படத்தை பிரபல டைரக்டரும் தயாரிப்பாளருமான ஒருவர் எடுக்க விருக்கிறார். இந்தப் படத்தில் முக்கிய பாத்திரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கிரிக்கெட் வீரர் பட்டோடி நவாப்பை படத்தயாரிப்பாளர் கேட்டுள்ளார்.

நாயகியைக் காதலிக்கும் ஒரு கிரிக்கெட் வீரர் காதல் கொள்ளும் கதையை உடையது இத்திரைப்படம். படத்துக்கான படப்பிடிப்பு பெரும்பகுதி லண்டனில் பிரபல கிரிக்கெட் மைதானமான லார்ட்ஸிலும் லீட்ஸ் நகரிலும் எடுக்கப்படும்.

படத்தில் நடிப்பதற்கு வந்துள்ள அழைப்பு பற்றி பட்டோடி நவாப்பிடம் நிருபர்கள் கேட்டபொழுது: "நான் திரைப்படங்களை விரும்புகின்றேன், நடிக்கவும் ஆசைப்படுகின்றேன் ஆனால் நேரம் கிடைக்கவேண்டுமே" என்று பதிலளித்தார்.

இந்தப் படத்தின் கதாநாயகி யார் என்று இன்னும் தெரியவில்லை. ஆனால் பிரபல இந்திய நடிகை கதாநாயகியாக நடிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பட்டோடி நவாப்பின் காதலியான நடிகை சர்மிளா தாகூரிடம் இப்படத்தின் கதாநாயகியாக நடிக்க விரும்புகிறீர்களா என்று கேட்கப்பட்டபொழுது: "எந்தப்படமானாலும் சரி. அவருடன் நடிப்பதில் மிக மகிழ்ச்சி கொள்வேன்" என்று பதிலளித்தார்.

## அமெரிக்க நடன குழுவினர் இலங்கை விஜயம்

நியூயோர்க், ஜன. 10யுஸ்

அமெரிக்காவின் புகழ் பெற்ற போல் டெயிலர் நடனக்குழுவினர் மத்திய கிழக்கு, ஆசியநாடுகளில் மூன்று மாத காலம் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கின்றனர். நவீன நடனத்தில் பிரபல்யம்வாய்ந்த இக்குழுவினரின் சுற்றுப்பிரயாணம் இம்மாதத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

திரு போல் தனதுகுழுவில் ஒன்பது நடனக் காரர்களை, இசை நிர்வாகிகள், பயிற்சி பெற்ற மேடை அமைப்பாளர்கள் ஆகியோரையும் கூட்டிச்செல்கிறார். இவர்களது நடனநிகழ்ச்சிகள் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 24, 25-ம் திகதிகளில் நடைபெறும்.

"இந்த நடனங்கள் பாஷை என்ற முட்டுக்கட்டைக்கு அப்பாற்பட்டவை, மனித சமுதாயத்தின் மதிப்பிலு

(8-ம் பக்கம் பார்க்க)

பசு வதைத்தடை

## தமிழ் நாட்டில் விசாரணைச்சபை நியமனம்

சென்னை, ஜன. 10

பசுவதைத் தடைச்சட்டத்தைத் தீவிரமாக அமுல் செய்வதற்கு தமிழ் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்நாட்டு முதல் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் விசாரணைச் சபையொன்றை நியமித்துள்ளார்.

பசுவதைத் தடைச்சட்டத்தை எவ்விதமாகத் தீவிர அமுல் செய்யலாமென்பது குறித்து ஆராயவே இச்சபை நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## 'உண்ணாவிரதத்தை நிறுத்தி உயிரைப்பாதுகாக்கு' பிரம்மச்சாரிக்கு இந்திரா கோரிக்கை

மைசூர், ஜன. 10

உண்ணாவிரதத்தை நிறுத்தி மதிப்புக்குரிய உயிரைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு பிரபுதத்தா பிரம்மச்சாரிக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

பசுவதையைத்தடைசெய்யுமாறு கோரி பிரம்மச்சாரி கடந்த நவம்பர்மாதம் 20-ம் திகதியிலிருந்து உண்ணாவிரதமிருந்துவருகிறார்.

இவரது உடல்நிலை இப்பொழுது மோசமடைந்திருப்பதாக டாக்டர்கள் அறிவித்துள்ளனர். இவரது நிறையில் 61 ராத்தல் குறைந்திருக்கிறது.

## அமெரிக்காவின் மாபெரும் யுத்த நடவடிக்கை

வாஷிங்டன், ஜன. 10

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் அமெரிக்கா மேற்கொண்டுள்ள மாபெரும் யுத்த நடவடிக்கை வியட்நாமில் தான் என்று அமெரிக்கப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கொரியா யுத்தம் உச்சக்கட்டத்தில் நடைபெற்றபொழுது, அங்கு நாலு லட்சத்து எழுபத்து மூவாயிரம் அமெரிக்கத் துருப்புகள் இருந்தன என்றும் ஆனால் வியட்நாமில் இப்பொழுது மூன்று லட்சத்து தொண்ணூறாயிரம் அமெரிக்கத் துருப்புகள் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் இந்தப்புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளிலுள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 73 ஆயிரமாகும்.

தாஷ்கண்ட் பிரகடன ஓராண்டு தினம்

## "காஷ்மீர் பிரச்னை தீராதவரை பதற்றநிலை நீடிக்கும்" —அயூப்கான்

## 'அமைதியை விரும்புவோர் பிரகடனத்தை பின்பற்றுவர்' — "பிராவ்டா"



மாஸ்கோ, ஜன. 10

சாஸ்திரி - அயூப்கான் தாஷ்கண்ட் பிரகடனம் கைச்சாத்தானமுதலாண்டு தினம் மாஸ்கோவிலும் புதுடில்லியிலும் ராவல்பிண்டியிலும் இன்று நினைவு கூரப்பட்டது.

மாஸ்கோவிலுள்ள இந்திய தூதர் திரு. கேவல்சிங் இங்கு நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில், தாஷ்கண்ட் பிரகடனத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நிறைவேற்ற இந்தியா முழுமனத்துடன் விரும்புகிறது என்றும் பாகிஸ்தானின் போக்கு காரணமாக — துரதிருஷ்டமாக இதில் முன்னேற்றம் காணப்படவில்லை என்றும் கூறினார்.

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் வெளியிட்ட செய்தியில் தாஷ்கண்ட் பிரகடனத்தை பாகிஸ்தான் ... தாஷ்கண்ட் பிரகடனத்தைத் பாகிஸ்தான் கைவிடவில்லை என்று தெரிவித்த அதிபர் அயூப்கான் ஜம்மு-காஷ்மீர் பிரச்னை தீராத வரையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பதற்ற நிலைமை நீடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சோவியத் பத்திரிகையான "பிராவ்டா" வெளியிட்டுள்ள செய்தியில், அமைதியை விரும்புபவர்கள் தாஷ்பிரகடனத்தை நிச்சயம் பின்பற்றுவார்கள் என்று தெரிவித்துள்ளது.

ரஷ்ய அரசாங்க பத்திரிகையான "இஸ்வெஸ்டியா" வெளியிட்டுள்ள செய்தியில், தாஷ்கண்ட் பிரகடனம் முழுவதுமாக அமுல் செய்யப்படவேண்டுமென்றும் இதனை நிறைவேற்ற இரு தரப்பினருடைய ஒத்துழைப்புத்தேவையென்றும் கூறியுள்ளது.

அரசாங்க செய்தி ஸ்தாபனமான "டாஸ்" செய்துள்ள விமர்சனத்தில் தாஷ்கண்ட் பிரகடனம் நிலைத்து நிற்பதையே சோவியத் மக்களும் அரசாங்கமும் விரும்புகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் உறவு முறைகள் நீடிக்க வேண்டும். இதற்கான வழியை தாஷ்கண்ட் பிரகடனம் வகுத்துள்ளது. உண்மையான - முழு அளவிலான நட்பு இன்னும் ஏற்படாவிட்டாலும் மோசமான கட்டங்கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதை இரண்டு நாடுகளும் உணர்ந்திருக்கின்றன என்றும் "டாஸ்" கூறுகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உனது வாக்குறுதியை எப்பொழுதும் காப்பாற்றிக்கொள். உயிரையே தியாகம்செய்யவேண்டி நேரிடினும் அதனைக் காப்பாற்றும் பழகிக்கொள். தூய்மையானதும், உண்மையானதுமான ஒரு வாக்குறுதியைக்காப்பாற்ற ஓர் உயிரைத் தியாகம்செய்தாலும் கவலைப்படவேண்டியதில்லை. வாக்குறுதி கொடுக்கும்பொழுது அவசரப்படக்கூடாது. ஆனால் கொடுத்தபின் அதனை நிறைவேற்றத் தயங்காதே.

—சுவாமி சிவானந்தா


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மார்கழி மீ 27 (11-1-67)


## ஒரே ஒரு கடிதம்

ஒரு கடிதம்: ஒரேயொரு கடிதம் அரசியல் கட்சிகளுக்கிடையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அரசியல் கட்சிகள் மட்டுமல்ல இலங்கையில் இரு பெரும் மதத்தவரின் மதிப்புக்குரிய இரண்டு பெரும் மதங்களின் தலைவர்களையும் இக்கடிதம் சம்பந்தப்படுத்தியிருப்பதால், இரு மதத்தினருக்கும் மனக்கவலையையும் ஏற்படுத்திவிடுகிறது. அரசியல் கோட்பாடுகளுக்கும்சமய நெறி முறைகளுக்கும் ஒரு 'சவாலாக' உருவெடுத்திருக்கும் அந்தக் கடிதம் பற்றிய பிரச்னைக்கு ஒரு முடிவு காணப்பட வேண்டியது அவசியம். இந்த நாட்டின் ஒழுக்கம், கட்டுப்பாடு, வாழ்க்கைநெறி ஆகியவை சம்பந்தப்பட்ட இந்த விஷயம் பற்றி பாரபட்சமற்ற பூரணவிசாரணை நடத்தி இப்பிரச்னையில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளவர்களின் நற்பெயரைப் பாதுகாக்க வேண்டியதுடன் நாட்டின் ஜனநாயக வாழ்க்கை முறையின் நற்பெயரையும் பாதுகாக்க வேண்டும்.

மல்வத்தை பௌத்த மதபீடத் தலைவர் மகாநாயகதேரோவின் பெயர் கட்டை மற்றும் சிலரின் பெயர்களும் சம்பந்தப்பட்டிருந்த ஒரு கடிதத்தின் புகைப்படப் பிரதியொன்றை எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா ஜனப் பிரதிநிதிகள் சபையில் சென்ற மாதம் 27-ம் திகதி சமர்ப்பித்திருந்தார். கருதினால் கூரே ஆண்டகைக்கு எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தில் வத்தேகம எம். பி. திரு. பி. பி. ஏ. வீரக்கூனின் கையெழுத்திடப்பட்டிருந்தது. சென்ற பொதுத் தேர்தலின் போது பணம் கொடுக்கப்பட்டது சம்பந்தமாகவும் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரமும் அந்தக் கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்ததாம்.

கடிதத்தின் பிரதியொன்றைச் சமர்ப்பித்த எதிர்க்கட்சித் தலைவர் இக்கடிதம்பற்றி 'விசாரணை செய்ய ஜனப்பிரதிநிதிகள் சபையின் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்றும் கோரினார். இக்கடிதம்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்ட உடனடியாகவே திரு. வீரக்கூன் தமக்கும் அந்தக் கடிதத்துக்கும் சம்பந்தமில்லை என்று மறுத்துவிட்டார். கடிதத்தில் சம்பந்தப்பட்டிருந்த மல்வத்தை மகாநாயகதேரோவும், கருதினால் கூரேயும் அதை மறுத்துவிட்டனர். சபையின் ஒத்திவைப்புப் பிரேரணைமீதே இக்கடிதத்தின் பிரதியைச் சமர்ப்பித்த எதிர்க்கட்சித் தலைவர் தெரிவுக்குழு நியமிக்கவேண்டுமென்று கோரினார். "போதியமுன்னறிவித்தலுடன் இதற்கான பிரேரணையைக் கொண்டு வாருங்கள்" என்று பிரதமர் பார்லிமென்ட் நடைமுறை விதிகளின்படி பதிலளித்தார். அந்தக்கடிதம் பற்றியபிரச்னை ஒரு சர்ச்சையாகி, இப்பொழுது தெரிவுக்குழு நியமிக்கக் கோரும் பிரேரணைக்கு எதிர்க்கட்சித்தலைவர்முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மதத் தலைவர்களின் மனதைப் புண்படுத்தும் நோக்கத்துடன் எதையும்கூறவில்லையென்றும் அக்கடிதம்பற்றி விசாரணைசெய்யத் தெரிவுக் குழு நியமிக்கப்படவேண்டும் என்றும் கூறுகிறார். "மல்வத்தை மகாநாயக தேரோவும் இதுபற்றி விசாரணை செய்யப்பட வேண்டும்" என்றுபிரதமரைக் கேட்டுள்ளார்.

தெரிவுக்குழு நியமித்து விசாரணை செய்யப்படுவது புதிய விஷயமல்ல. திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயகா நிதிமந்திரியாக இருந்த சமயத்தில் வரவு - செலவுத் திட்ட இரகசியங்கள் வெளிவந்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுபற்றியும்திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா பிரதமராக இருந்த சமயத்தில் 'இன்ஷூரன்ஸ் கம்பனி' மொரிஸ் ஒக்ஸ்போட் மோட்டார் கார் அன்பளிப்புச் செய்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுப்பற்றியும்தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டன. இந்த விசாரணைகளிலும் அவர்களின் நற்பெயர்கள் பாதுகாக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட அந்தக் கடிதம் உண்மையா? அதில் காணப்படும் கையெழுத்து திரு வீரக்கூனுடையதா அல்லாவிடில் அவரது கையெழுத்தை வேறு யாராவது உபயோகித்தார்களா என்பனபற்றி விசாரணை செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட எம். பி. யின் பெயரும் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள மதபீடத் தலைவர்களின் பெயரும்தெளிவாக்கப்பட்டுவிடும். பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் நிலவவும் அரசியல், மத ஸ்தாபனங்கள்பற்றி சந்தேகமும் தப்பெண்ணமும் ஏற்பட இடமில்லாமலும் போகும். விரைவில் பார்லிமென்ட் தெரிவுக்குழு நியமித்து இப்பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுமென எதிர்பார்ப்போம்.

இதேசமயம் தேர்தல் காலச் செலவுகள்பற்றியும் தேர்தல் பிரசாரச் செலவுகள்பற்றியும் ஒரு கொள்கைத் திட்டம் அல்லது புதிய விதி ஒன்று கொண்டுவர வேண்டிய அவசியம்பற்றியும் நம் நாட்டுத் தலைவர்கள் ஆலோசனை செய்வது நல்லது. விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும்ஜப்பானில், அந்நாட்டுப்பிரதமர் சாட்டோ சமீபத்தில் விடுத்த ஓர் அறிக்கையில் அரசியல் கட்சிகளின் ஒழுக்கம் நடவடிக்கை பற்றி ஐயுறவும் அவநம்பிக்கையும் எழுந்துள்ளது வருந்தத்தக்கதென்றும், இவற்றை நீக்கும்பொருட்டு தேர்தல் பிரசாரச் செலவைப் பெருமளவு குறைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இந்தியாவிலும் பொதுத்தேர்தல் பிரசாரம் ஆரம்பித்திருக்கிறது. அங்கும் தேர்தல்நிதி பற்றியும் தேர்தல் செலவு பற்றியும் குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்றன. பெரிய வர்த்தகர்களிடமிருந்து அரசியல் கட்சிகள் தேர்தல்நிதி பெறுவதைத் தடைசெய்யவேண்டுமென்று செய்யப்பட்ட முயற்சி அங்கு வெற்றி பெறவில்லை.

இங்கு தேர்தல் சட்ட விதிகளின்படி தேர்தல் முடிந்ததும் அபேட்சகர்கள்ஒவ்வொருவரும்கணக்குக் காட்டவேண்டும். அபேட்சகர்கள் கணக்குக் காட்டுகிறார்கள். அவை சரியான கணக்குகள் தானா என்பதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அபேட்சகர்களின் தனிப்பட்ட செலவு விபரக் கணக்குகள் மட்டுமல்ல அரசியல்கட்சிகள், அரசியல் ஸ்தாபனங்களின் நிதிநிலைமை, வரவு— செலவுக் கணக்குவிபரங்களும் வருடம் ஒருமுறையாவது பரிசீலனை செய்யப்படுமானால் வீண் புகார்களுக்கும் தப்பெண்ணங்களுக்கும் இடமிருக்காது. [illegible] தோன்றமாட்டா.



# சாஸ்திரிக்கு அஞ்சலி



இன்று இந்தியாவின் இரண்டாவது பிரதமரான அமரர் சாஸ்திரி மறைந்து ஓராண்டு பூர்த்தியாகின்றது இத்தினத்தை இந்தியா மட்டுமல்லாது உலகமனைத்தும் நினைவுகூரும் என்பதில் சந்தேகமில்லை. 'நேருவுக்குப் பின் என்ற பிரச்னை' நேரு இருந்த காலத்திலேயே சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்தபோதிலும், அமரர் சாஸ்திரி, நேரு மறைவின் பின் பதவியேற்ற கடமையைக் கண்ணியத்துடனும் திறமையுடனும் புரிந்து அவரின் இடைவெளியை நிரப்பியிருந்தார் பிரதமர் சாஸ்திரி பொறுப்பேற்ற இருபது மாதத்துக்குள் நாட்டில் கொந்தளிப்பும், அரசியல் நெருக்கடியும், பாகிஸ்தானின் கெடுபிடியும் தொடர்ந்துகொண்டிருந்தன. இவற்றையெல்லாம் கண்டு சாஸ்திரி அஞ்சவில்லை. உள்நாட்டு அமைதியின்மையையும், வெளிநாட்டு எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டுமென்ற பெரும் தத்துவத்தை உலகத் தலைவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் எடுத்துக் காண்பிக்க விரும்பினர். அவரின் கடமைகளும் கொள்கைகளும் அதற்கமைந்தாற் போலிருந்தன. இதன் பிரதிலிப்பே டாஷ்கண்ட் பிரகடனம். இந்தப் பிரகடனத்தில் பல பிரச்னைக்குரிய விஷயங்கள் சேர்க்கப்படவில்லையென உலக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தபோதிலும் டாஷ்கண்ட் பிரகடனம் இந்தியாவிற்கு மட்டுமல்லாது மற்றைய நாடுகளுக்கும் ஒரு முன்னோடியாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்கியுள்ளது.

நேருவின் உற்றநண்பனான சாஸ்திரி நேருவின் காலத்திலும்பார்க்க அவர் பிரதமராயிருந்த பொழுதே பல சிக்கலான பிரச்னைகளுக்கு தீர்வுகாணவேண்டியிருந்தது நேரு பிரதமராக இருந்த காலத்தில் மறைக்கப்பட்ட பிரச்னைகளை ஆராய்வதற்கும் தீர்வு காண்பதற்கும் சாஸ்திரியே அனுப்பிவைக்கப்படுவாராம்.

ஜனநாயகத்தில் பெரும் நம்பிக்கைகொண்ட சாஸ்திரி நேருவின்கொள்கைகளையும் அவரின்குறிக்கோள்களையும் நிறைவேற்ற பெரிதும் பாடுபட்டார். இளைஞராகவிருந்தகாலத்திலும்கல்லூரியில்பயிலும்பொழுதும் சாஸ்திரி வெளிநாட்டு ஆதிக்க ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்ததாகவும் சுதந்திர இயக்கங்களில் பங்கெடுத்ததற்காகவும் ஒன்பது ஆண்டுகள் சிறைக்கனுப்பப்பட்டார்.

பிரச்னைகளுக்குஒரு முடிவு காண்பதில் நம்பிக்கை கொண்டசாஸ்திரி அவற்றை பின்போடவோ அல்லது அவைகள் தானாகவே முடியும் என நம்பிக்கை கொண்டிருக்கவில்லை, நேருவின் மந்திரிசபையில் போக்கு வரத்து மந்திரியாக சாஸ்திரி இருந்த பொழுதொடரீந்து புகையிரத விபத்துக்கள் நடைபெற்றுக் கொண்டு வந்தன. இதைக் கண்டதும் தானாகவே தமது மந்திரிப் பதவியைராஜினாமா செய்தார்.

தியாகம், வீரம் ஒருங்கே அமைந்தசாஸ்திரி உறுதியானவர். அத்துடன் பணிவானவரும்கூட. தாஷ்கண்ட் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட சில மணி நேரங்களுக்குள் சாஸ்திரி இருதயக்கோளாறு காரணமாக மரணமானார். தாஷ்கண்ட பிரகடனம் பற்றி அறியவிரும்பிய மக்கள் வானொலியைத் திருப்பியபோது இடைஇடைக்கிடையே முறையில் சாஸ்திரியின் மரணம்பற்றிய துக்கமான செய்தியைக் கேட்டனர். இதனால் உலகமே துக்க சாகரத்தில் மூழ்கியது. இன்று சாஸ்திரி அமரராகிவிட்டார்.

# குழந்தை வேட்டை

துத்தன்காமன் என்பவன் ஓர் எகிப்திய பேரரசன். அவன் இறந்தபோது அக்காலத்து எகிப்திய வழக்கத்தின் பிரகாரம் அவனை ஒரு கல்லறையில் அடக்கம்செய்தார்கள். அதில் அவனுடைய பிரேதத்துடன்கூடவே மதிப்பற்ற பெரும் பொக்கிஷங்களும் அடைக்கம் செய்யப்பட்டன.

அந்தக் கல்லறையைத் திறந்து அதனுள் பொதிந்த பொக்கிஷங்களைத் திருட முயலுபவர்கள் ஆபத்துக்குள்ளாவார்கள் என்ற ஒரு சாபத்திடு ஏர்ண பரப்பரையாக இருந்துவந்தது

காணவன்பிரபு என்ற ஓர் ஆங்கிலேய சீமான் 'மந்திரமேது, மாயமேது; சூன்யமெங்கே, பில்லி எங்கே' என்று வீராப்புப் பேசிக்கொண்டு 1922-ம் வருடம் அந்தக் கல்லறையைத் திறந்தான். அந்தச் சமாதிக்குள் என்ன பேய், பிசாசு இருந்ததோ நாம் அறியோம். ஆனால் ஒரு சின்ன நுளம்புமட்டும் அவனைக் குத்திவிட்டதால் ஆறு மாதம் கழித்து அந்தப் பிரபு எகிப்திலுள்ள ஒரு ஹோட்டலிலேயே நியூமோனியாக் காய்ச்சல் பிடித்து மரித்துவிட்டான்.

## நாட்டிலும் நகரிலும்

இவனுடன் இந்தப் பொக்கிஷ வேட்டையில் ஈடுபட்ட இன்னும் பலரும்மாண்டுமடிந்துபோனார்களாம்.

'பேரோ மன்னன் துத்தன்காமனின் சமாதி மாளிகையைத் தொட்டவனைத் தொடர்ந்து மரணம் பறந்து வரும்' என்று கூறியது சாபம்.

எகிப்திய முதுபொருள் ஆராய்ச்சி தலைவர் முகம்மது இபுராகிம் இந்தச் சாபத்தில் பூரண நம்பிக்கைகொண்டவர். ஆனால் எகிப்திலுள்ள பிரெஞ்சு ஸ்தானிகரும் வேறு சிலரும் 'இந்தக் கதையை நம்புகிறீர்களா?' என்று கேலி பண்ணி அவருடைய மனதை மாற்றிவிட்டார்கள். முகம்மது இபுராகிம் துத்தன்காமனின் கல்லறையை மறுபடியும் [illegible] நாட்களுக்கு முன்பு திறந்தார். அதற்குள்ளிருந்த சில விநோதப்பொருட்களை பாரிஸ் நகரத்தில் நடக்கும் ஒரு பொருட்காட்சிக்கு அனுப்பிவைக்கவிரும்பினர்.

கடந்த திங்கட்கிழமை அவர் தெருவில் நடந்து போனபோது ஒரு மோட்டார் வண்டி அவர் மீது வந்து மோதியது. முகம்மது இபுராகிம் துத்தன்காமனின் சாபத்துக்குப் பலியாகிவிட்டார்.

பில்லி, சூனியம், செய்வினை, அஞ்சனம், ஆருடம் இவற்றில் சிலருக்கு நம்பிக்கையுண்டு சிலருக்கு இல்லை. நீங்கள் இதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்?

பண்டாரவளையில் சில நாட்களுக்கு முன்பு 14 வயதுச் சிறுவன் ஒருவன் தலையும் கைகளும் சிதைக்கப்பட்டு காட்டுப் புதருக்குள் காணப்பட்டான். அவனுடைய பிணத்தின் அருகில் ஒரு கூடை பூக்களும் இருந்தனவாம்.

திரவியம் தோண்டுவதற்காக இச்சிறுவன் பலி கொடுக்கப்பட்டிருக்கிறான் என்று பக்கத்திலுள்ள கிராமத்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்களாம் என்று கேள்வி.

குழந்தை பிடிக்கும் சாமியார்கள் ஊரெல்லாம் திரிகிறார்கள் என்ற இன்று நேற்றுமட்டுமல்ல பல வருடங்களாக இலங்கை முழுவதிலும் பீதி நிலவி வந்துள்ளது. பத்துப் பதினைந்து வயதுப் பராயமுள்ள சிறு பெண்களையும் ஆண்பிள்ளைகளையும் இந்தச் சாமியார்கள் பிடித்துக்கொண்டு போய் திரவியம் தோண்டுவதற்குப்பலிகொடுக்கிறார்கள் என்ற ஒரு வதந்தி உலாவி வருகிறது.

பழங்காலத்து ராஜாக்கள் வன்னிப் பகுதியில் பல திரவியங்களைப் புதைத்துவைத்திருக்கிறார்களென்றும், அந்தப் புதையல்களைப் பூதங்கள் பாதுகாத்துவருகின்றனவென்றும், அந்தப் பூதங்களுக்கு நரபலிகொடுத்தால் புதையலை எடுக்கலாமென்றும், அதன் பிரகாரம் சிலர் புதையல் எடுத்திருக்கிறார்களென்றும் பல விதமான கதைகள் ஊரில் உலாவுகின்றன. இக்கதைகள் எவ்வளவு தூரம் உண்மையோ, பொய்யோ நாம் அறியோம்

துத்தன்காமனின் கல்லறையைத் திறந்தவர்கள்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மீன் பிடித்தஎங்களை இராணுவத்தினர் தாக்கி கட்டுமரத்தில் ஏற்றினர் அந்தகட்டுமரத்தில்விலையுயர்ந்த பல சேலைகள் இருந்தன"

## கடத்தல் முயற்சி விசாரணையில்சாட்சியம்; கைதான மூவரும் விடுதலை

வல்வெட்டித்துறை, செவ். மீன்பிடிப்பதற்காக வலைகளை கட்டுமரத்தில் போயிருக்கொண்டிருந்த பொழுது இராணுவத்தினர் தங்களைத் தாக்கி, வேறொரு கட்டுமரத்தில் பயமுறுத்தல் மூலம் ஏற்றியதாகவும், அக்கட்டுமரத்திலிருந்த இரண்டு கட்டு காஷ்மீர்சேலைகளை எடுத்துக்கொண்டு இராணுவத்தினர் இராணுவ முகாமுக்கு சென்றதாகவும் அருணாசலம் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடற்கரையில் கடத்தல் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாக சந்தேகத்தின்மீது வல்வெட்டித்துறை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அருணாசலம், குழந்தைவேல், இராசலிங்கம் ஆகிய மூவரும் சுங்க சப்கலெக்டர் திரு. கே. விக்னேஸ்வரராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டனர். அப்போது அருணாசலம் சாட்சியமளிக்கையில் தான் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது: "நானும் மற்றும் குழந்தைவேல், இராசலிங்கம் ஆகிய மூவருமாக மீன்பிடிப்பதற்காக வலைகள் எடுத்துக் கட்டுமரம் ஒன்றில் போகும் பொழுது இராணுவத்தினர் இவர் அவ்விடம் வந்து எங்களைத் தாக்கினர். தாக்கிய பின்னர் வேறொரு கட்டுமரத்தில் எங்களை ஏறச்சொல்லி பயமுறுத்தினர். பயமுறுத்தலினால் நாங்கள் ஏறினோம். அதில் இருந்த பொருட்கள் எவ்விதம் அங்கு வந்ததென்று எங்களுக்குத் தெரியாது. இராணுவத்தினர் இரண்டு கட்டு காஷ்மீர் சேலைகளை எடுத்துக்கொண்டு இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லும் போது நாங்கள் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தோம்."

குழந்தைவேல், இராசலிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணை முடிவில் உதவி சுங்க கலெக்டர் திரு. பத்திராஜு விமலகர்மா வின் உத்தரவின் பேரில் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## மாதர் கைவிட்டனர்

பருத்தித்துறை, செவ். நெல்லண்டை அரசாங்க பயிற்சி நிலைய நெசவுசாலைக்குமுன் சத்தியாக்கிரகம் செய்த மாதர்கள் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டுள்ளனர். குடிசைக் கைத்தொழில் மாகாண அதிகாரி, வடமராட்சி காரியாதிகாரி பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா ஆகியோர் நடத்தியசமரசப் பேச்சுவார்த்தையினால் சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டுள்ளது.

இனிமேல் வடமராட்சிக் காரியாதிகாரி அறிவித்த பின்பின் நிலையம் திறக்கப்பட இருக்கின்றது.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நரபலி கொடுத்திருந்தால் உயிர் பிழைத்திருப்பார்களா? இதில் என்ன மர்மம் இருக்கிறது? பேய், பிசாசு, பூதம், அஞ்சனம், ஆருடம் முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவர்கள் இதற்கு என்ன மறுமொழி சொல்லப் போகிறார்கள்?

இவை எல்லாம் ஆழ்ந்த சிந்தனைக்குரிய விஷயங்கள்.

--வழிப்போக்கன்

## ஒழுங்கீனமாக....

(1-ம் பக்கம் பார்க்க)

பகுதி சப்இன்ஸ்பெக்டர் திரு. சமரக்கோன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். வடமாகாணத்தில் டாக்ஸி சாரதிகளுடன் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ஒருவர் விசேஷ மகாநாடு கூடியது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்ஸிகளை ஓட்டிச்செல்லும்போது வீதி ஒழுங்கு முறைகளைச் சரியாகக் கையாளவேண்டும் என்றும், அதிவேகமாகவும் தகைமையற்றமுறையிலும் டாக்ஸிகளை வீதிகளில் ஓட்டக்கூடாதென்றும் திரு. சுந்தரலிங்கம் சாரதிகளுக்குத் தெரிவித்தார். இதுசம்பந்தமாக இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் 'போக்கு வரத்து ஒழுங்கு முறைகள்' பற்றிய விசேஷ வகுப்புகளை டாக்ஸிச் சாரதிகளுக்கு நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறைந்த தூரங்களுக்கு டாக்ஸிகளை ஓட்டாது மறுப்பதாக பொலிஸ் நிலையத்தில் பலர் முறைப்பாடுகள் செய்வதாவும் அப்படிச் செய்யக்கூடாதென்றும் பொதுமக்களுடன் நல்லுறவுடன் டாக்ஸி சாரதிகள் நடந்துகொள்ள வேண்டும் என்றும் பொலிஸ் சுப்பின்டென்ட் மேலும் தெரிவித்தார்.

குறைந்த தூரங்களுக்கு டாக்ஸிகளை வாடகைக்குக் கொண்டு சென்று விட்டு, திரும்பி வரும்போது தாங்கள் டாக்ஸிகளை பிரயாணிகள் இல்லாமல் வெறுமனேயே கொண்டுவருவதால் தங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகின்றது என்றும், கொழும்பிலும் பார்க்க யாழ்ப்பாணத்து வீதிகள் மிகவும் சீர்கேடானவை என்றும் அத்துடன் இங்கு பெட்ரோல் கலன் ஒன்றிற்கு 30 சதம் கூடவென்றும் டபர்கள் தட்டுப்பாடாகத் தாங்கள் மிகவும் கஷ்டமுறுவதாகவும் டாக்ஸி சொந்தக்காரர்களும் சாரதிகளும் பொலிஸ் சுப்பின்டனுக்குத் தெரிவித்தார்கள். யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பல தனிப்பட்ட கார்ச் சாரதிகளும் புகையிரத நிலைய போர்ட்டர்களும் சேர்ந்து டாக்ஸி சாரதிகளுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுப்பதும் பொலிஸ் சுப்பிரின்டனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இது சம்பந்தமாக தாம் ஆவன செய்வதாகவும் அவர் சாரதிகளுக்குத் தெரிவித்தார்.

## உத்தரவின்றி மரம ஏற்றிவந்தனராம்

சாவகச்சேரி, செவ்வாய். கரவெட்டியைச் சேர்ந்த பி. முருகேசு, ஐ. சிவபாதம், கே. சந்திரசேகரஆனந்தம், பி. தவயோகம், வி. தியாகம் ஆகிய ஐவரும் பளைப்பகுதியிலிருந்து ஐந்து பாலை மரங்களை ஏற்றி வரும்போது பளைப்பொலிஸ் சார்ஜன்ட் கைது செய்து பளைப்பகுதிக் காட்டு இலாகா அதிகாரி திரு. எஸ். கதிரேசு மூலம் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரொபேட், இவரை முன்னிலையில் ஆஜர் செய்தார்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபர் ஐவரையும் தலா ரூபா 500 பிணையிலும் மரம் ஏற்றிய டிராக்டரைப் பத்தாயிரம் ரூபா பிணையிலும் மரங்கள் ஐந்தையும் கோர்ட்டில் ஒப்படைத்து மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## கிணற்றுள் விழுந்து வயோதிபமாது மரணம்

மானிப்பாய், திங். அராலி கிழக்கைச்சேர்ந்த வேலுப்பிள்ளையின் மைத்துனர் பெண் சின்னம்மா என்பவர் கிணற்றில் வீழ்ந்து மரணமானது பற்றி வலிகாமம் மேற்கு மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா மரண விசாரணை நடத்தினார். சங்கானைப் பொலிசார் புலன் விசாரணை நடத்தினர்.

ராஜபாக்கியம் சாட்சியமளிக்கையில் இறந்தவர் தனது தாயாரென்றும் அவருக்கு 70 வயதென்றும் சம்பவதினம் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது இறந்தசடலம் கிணற்றில் மிதந்ததாகவும், உடனே பொலிசாருக்கு அறிவித்ததாகவும்கூறினார். மரண விசாரணை அதிகாரி விபத்தினால் ஏற்பட்டமரணம்எனத் தீர்ப்பளித்தார்.

## நெசவு நிலையம்

உடுப்பிட்டி, செவ்வாய் கரவெட்டி வடக்கு, அதியில்உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டாக்டர். டபிள்யூ. தஹநாயக்காவினால் திறந்துவைக்கப்பட்ட நெசவு நிலையம் இம்மாதம் 2ம்திகதி முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது 25 மாணவிகள் பயிற்சி பெற்று வரும் இந் நெசவுசாலைக்குக் கரணவாய் தெற்கைச் சேர்ந்த செல்வி விசாலாட்சி நெசவு ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் டாக்ஸிகளை நிறுத்துவதற்கு தகுந்த இடமில்லாமலிருப்பதால் டாக்ஸிச்சாரதிகள்பெரும் அவஸ்தைப்படுவதாகவும் புதிய பஸ் நிலையத்தை அமைக்கும்போது அங்கு 3 வரிசையில் 20 டாக்ஸிகளை நிறுத்துவதற்காக ஒழுங்குசெய்து தருமாறு டாக்ஸிச்சொந்தக்காரர்கள் பொலிஸ் சுப்ரின்டனிடம் கேட்டுக்கொண்டனர்.

(ந. தி)

## வயோதிபரின்பரிதாப மரணம்

குரும்பசிட்டி, திங்கள். வாழைத் தோட்டத்திற்கு நீர் இறைத்துக் கொண்டிருந்த வயோதிபர் திடீரெனத் துலாமுறிந்து விழுந்ததால் கிணற்றுக்குள் வீசப்பட்டு மரணமான பரிதாபகரமான சம்பவமொன்று குரும்பசிட்டியில் நிகழ்ந்துள்ளது.

குரும்பசிட்டியைச்சேர்ந்த சின்னத்தம்பி தாமோதரம் பிள்ளை(வயது 82) என்பவரே இறந்தவராவர். இவருடன் உதவியாக துலா மேல் நின்று கொண்டு மிதித்து உதவி புரிந்தவர் நிலத்தில் விழுந்து பலமானகாயத்துக்குள்ளானார். கிணற்றில் இருந்து உடனடியாக திரு மு. சுந்தரராஜன் என்பவரின் உதவியால் மீட்கப்பட்ட வயோதிபர் தாமோதரம் பிள்ளை மிகவும் அபாயகரமான அறிவற்ற நிலைமையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சுமார் 24 மணிநேரத்தின்பின்னர்மரணமானார்.

இவரது மரணம் குறித்து தெல்லிப்பழை, மயிலிட்டிப்பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சுந்தரமூர்த்தி மரணவிசாரணை நடத்தினார். கிணற்றில்வீழ்ந்ததால் மரணம்சம்பவித்தது என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.


## குரும்பசிட்டியில் திருட்டு அதிகரிப்பு

குரும்பசிட்டி, செவ். குரும்பசிட்டியைச்சேர்ந்த தேநீர்க்கடை ஒன்றில் திருடர்கள் தமது கைவரிசையை காண்பித்துள்ளனர். இக்கடைச் சொந்தக்காரரான பொ. பரமு என்பவர் காங்கேசன்துறைப்பொலிஸ் நிலையத்தில் தமது தேநீர்ச்சாலையிலிருந்து ஜன்னல் கதவு வழியாக உட்புகுந்த திருடர்கள், ரொக்கப் பணமாக 500 ரூபாவும் இரண்டு கைக்கடிகாரங்களையும் திருடிவிட்டதாகச் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிஸார் புலன் விசாரணை செய்தனர். பொலிஸ் விசாரணையைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் இருநபர்கள் கைதாகியுள்ளனர். பொலிஸ் நிமண்டில் வைக்கப்பட்டுள்ள இவ்விரு சந்தேக நபர்களும் மல்லாகம் நீதிபதி முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்படுவர்.

சலூன் தொழிலாளி ஒருவரின் வீட்டில் வைத்து பட்டப்பகலில் சைக்கிள் திருட்டுப்போன சம்பவம் ஒன்றும் நடைபெற்றுள்ளது இக் களவு பற்றி பொலிஸில் புகார் செய்ததையடுத்து சைக்கிள் வீட்டு வளவுக்குள்ளே மறைவிடியும் போடப்பட்டிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து கைது செய்யப்பட்டவர் மீது காங்கேசன்துறை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

## புத்தகங்கள் அன்பளிப்பு

அளவெட்டி, செவ். விமலகாமம் ஆங்கிலபாடசாலையில் கல்வி பயிலும் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட மாணவ மாணவிகளுக்கு காங்கேசன்துறை பட்டினசபையார் இவ்வருடம் வழமையிலும் கூடுதலான புத்தகங்களை வழங்க இருக்கிறார்கள். பட்டின சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கும் புத்தகங்கள் வழங்க இருக்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கு தீ வைத்தனராம்

பலாலி, செவ்வாய் மயிலிட்டியைச் சேர்ந்த எஸ். வேல்முருகன் என்பவர் தமது வீட்டை இனம் தெரியாத நபர்கள் தீ வைத்ததாகவும் தாங்கள் கூரையிட்டு தீயை அணைத்ததாகவும் காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்துள்ளார். அடுத்த வளவில் ஒரு மண்ணெய் போத்தலும், வேறு போத்தலும், ஒரு பந்தமும் இருந்ததாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நச்சுப்போத்தல் வெடித்தது

யாழ்ப்பாணம், புதன் நச்சுத்திராவகப் போத்தலைத் திறக்க முயன்றபோது அது வெடித்ததால் காயங்களுடன் மயக்கமான நிலையில் மானிப்பாயைச் சேர்ந்த சே லுப்பிள்ளை நாகேந்திரம் என்ற (17 வயது) இளைஞர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தோட்டத்திலுள்ள மிளகாய்ப்பயிருக்குத் தெளிப்பதற்காக வாங்கியிருந்த நச்சுத்திராவகப் போத்தலை அவர் திறக்க முயன்றபோது அது வெடித்து நச்சுத் திராவகம் அவரது வாய்க்குள்ளும், மூக்குக்குள்ளும் போனதால் அவர் அறிவிழந்ததாக பொலிசார் நடத்திய விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. ந. நி.

## கம்யூனிஸ்ட் வாலிபர் மகாநாடு


யாழ்ப்பாணம், புதன் வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டை வெகு விரைவில் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையினர் மேற்கொண்டு வருகின்றனர். இம்மாதம் 18-ம் திகதி நடைபெறவிருக்கும் மேற்படி வாலிபர் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டத்திலேயே மாநாட்டிற்கான திகதி நிச்சயிக்கப்படவுள்ளது. (ந. நி.)

# பி. எஸ். ஏ. சைக்கிள் ஓட்டப்பந்தயம்


மற்றவர்களை முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.
கோல்டின் டிலக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


## "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நடாத்தப்படும்

### விபரங்கள்

ஜனவரி 25, 1967 — பி. ப. 4·00 மணி

**முதலாவது ஓட்டப்பந்தயம்**
**மாணவர் போட்டி**

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு | கிரிக்கெட் மட்டை |

ஜனவரி 25, 1967 — பி. ப. 4·30 மணி

**இரண்டாவது ஓட்டப்பந்தயம்**
**வயது வந்தோர் போட்டி**

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

| | |
|---|---|
| முதலாவது பரிசு | பி. எஸ். ஏ. சைக்கிள் |
| இரண்டாவது பரிசு | இரண்டு அடுப்பு "டமைஸ்" குக்கர் |

### விதிகளும் நிபந்தனைகளும்

**முதலாவது ஓட்டப்பந்தயம்**

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாடு'வில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ். ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: ஜனவரி, 20, 1967.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஓட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் "ஈழநாடு" ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும்: போட்டிக் கூப்பன்களை சைக்கிள் ஓட்டப் போட்டி, 'ஈழநாடு' த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

**இரண்டாவது ஓட்டப்பந்தயம்**

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஓட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஓட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்.

### கூப்பன்

1. யான் 18 வயதுக்கு மேற்பட்டவன் / உட்பட்டவன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். யான் முதலாவது / இரண்டாவது போட்டியில் பங்குபற்றுகிறேன். (தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்.)
2. இந்த சைக்கிள் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட நடந்துகொள்வேன்.

பெயர்: ____________________

விலாசம்: ____________________

இலக்கம்: ____________________

[பி. எஸ். ஏ. சைக்கிளின்பிறேம் (frame)]

(கோட்டில் வெட்டி எடுக்கவும்)

### அறிவிப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டி 1967 ஜனவரி 25-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள தென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

## கட்டுவனுக்கு வெற்றி

குரும்பசிட்டி, செவ். வலிவி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் கட்டுவன் ஞானோதயாக் கோஷ்டிக்கும், குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையக் கோஷ்டிக்குமிடையில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகி இடைவேளைவரை கட்டுவன் கோஷ்டி நாலு கோல்களையும், குப்பிளான் கோஷ்டி ஒரு கோலையும் பெற்றிருந்தன. இடைவேளையின் பின்னர் கட்டுவன் மேலும் ஒரு கோலைப் போட்டுக்கொண்டது. ஆட்டம் முடிவடைய 10 நிமிடங்கள் இருக்கும் போது கட்டுவன் கோஷ்டியைச் சேர்ந்த தேநாதன் என்ற வீரர் 'பூட்ஸ்' காலை எதிர்க்கோஷ்டி வீரர் கணேசலிங்கம் மீது உயர்த்தியதன் விளைவாக மத்தியஸ்தர் 'ஃபவுல்' எனக் கூறி தேநாதனை எச்சரிக்கைசெய்தார்.

இறுதியில் கட்டுவன் கோஷ்டி 5-1 கோல்களால் குப்பிளான் கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. எஸ். சச்சிதானந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

---

## இந்து வாலிபர் குறூப் சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன் குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பி பிரிவு குறூப் சாம்பியன் போட்டியில் உரும்பராய் விளையாட்டுக் கழகமும், திருநெல்வேலி சங்கமும் மோதிக்கொண்டன. இந்து வாலிபர் சங்கக் கோஷ்டி 3-1 கோல் எண்ணிக்கையில் பி குறூப் சாம்பியனாகியது.

தைப்பொங்கல் தினத்தன்று ஏ குறூப் சாம்பியனுக்கும் பி பிரிவு சாம்பியனுக்குமிடையில் வருடாந்த சாம்பியனுக்கான போட்டி வலிவி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெறும். நி

---

## லீக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் இவ்வருடத்துக்கான கழகங்களுக்கிடையேயான லீக் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 17ந் தேதி செவ்வாய்க்கிழமை யாழ் மத்தியக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இச்சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பப் பத்திரங்களை 17ந் தேதிக்கு முன்பாகக் காரியதரிசி திரு. என். மகேந்திரனிடம் அனுப்பிவைக்கும்படி கழகங்கள் கேட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட அரசாங்க சேவையர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அரசாங்கசேவையர்களுக்கிடையேயான இவ்வருட உதைபந்தாட்ட 'லீக்' சுற்றுப்போட்டி வெகுவிரைவில் நடைபெற இருக்கிறது. இதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் இம்மாதம் 11ந் தேதி புதன்கிழமைக்கிடையில் காரியதரிசி திரு. ச. ஜெ. குமரையாவிடம் அனுப்பும்வண்ணம் கோரப்பட்டுள்ளது.


---

## சாம்பியன் போட்டி

யாழ்ப்பாணம், புதன் தமாற்பகுதிக்கும், கல்விப் பகுதிக்கும் இடையேயான உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி வருகிற 15ந் தேதி ஞாயிற்றுக்கிழமை யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது.


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்


ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து **உங்கள்** முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந்தொகைக்கான காசோலையையும் பெறலாம்


அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.





## ★ உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு

124-ம் இலக்க சுவீப் சீட்டிழுப்பு 12-1-67-ல் அளாவையில் நடைபெறும்


1-வது பரிசு ரூ. 100,000 அல்லது மேர்சிடேஸ் பென்ஸ் 190, ரூ. 50,000/- ரொக்கமும்.




2-வது பரிசு ரூ. 40,000 அல்லது புத்தம் புதிய மொறிஸ் 1000 மும் ரூ. 24,750/- ரொக்கமும்



3-வது பரிசு ரூ, 10,000 அல்லது புத்தம் புதிய பியட் 600 ம் ரூ. 1900/- ரொக்கமும்.



இந்த சீட்டிழுப்பில் 100 ஆறுதல் பரிசுகள் பெறுபவர்கட்கு மெஸர்ஸ்ஸ்ரீரம்யா இண்டஸ்ட்ரீஸ்ஸ்தாபனத்தாரின் அநுசரணையுடன் அவர்கள் விரும்பினால் தங்கள் பரிசுத்தொகையிலிருந்து விசேஷமாகக் குறைக்கப்பட்ட விலையான ரூ 495க்கு 'கோபல்ட்' தையல் மெஷின்ஒன்றை வாங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். (வழக்கமான விற்பனை விலை ரூ. 690/-)



கடந்த இரண்டு கார் சுவீப் சீட்டிழுப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் தலா ரூ. 10.4 பரிசாகப் பெற்றார்கள்.

இந்தக் கார்களையும் தையல் மெஷின்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்கு பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்

## ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

**50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமாவோ சமர்ப்பித்த கடிதம்:

# 'மதத்துக்கும் நாட்டுக்கும் என்றும் துரோகம் செய்யேன்'

## விசாரணை செய்யுமாறு பிரதமருக்கு மல்வத்தைதேரோ கடிதம்

கொழும்பு, திங்கள்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பார்லிமெண்டில் குறிப்பிட்ட 'வீரக்கோன் கடிதம்' சம்பந்தமாக உடன் விசாரணை செய்யுமாறு மல்வத்தைபீடாதிபதி மகாநாயக்கதேரோ பிரதமரிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டுக்கும் மதத்துக்கும் என்றும் தான் துரோகம் செய்யமாட்டேனென்று பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு இன்று அவர் எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. டி. பி. வி. வீரக்கோன் எம். பீ. கொழும்பு அதிமேற்றிராணியார் கார்டினல் கூரேக்கு எழுதியதாக ஒரு கடிதத்தை திருமதி பண்டாரநாயக்கா முன்னர் பார்லிமெண்டில் சமர்ப்பித்திருந்தார். அக்கடிதத்தில் பார்லிமெண்ட் தேர்தல்கள் என்று தம்மைப்பிடப் பட்டிருந்ததாகவும், 1965-ம் ஆண்டு நடந்த தேர்தல் பற்றியும், அதற்கான செலவுகள் பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மல்வத்தை மகாநாயக்காவுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்று ஆரம்பித்து மொத்தம் 57 ஆயிரம் ரூபாய்க்கான செலவுகள் பற்றிய விபரம் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக மல்வத்தை பீடாதிபதி உடன் மறுத்து, தன் மீது சாட்டப்பட்டுள்ள அபாண்டபழிக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று பிரதமரைக் கடித மூலம் முன்னர் கேட்டிருந்தார்;

தன்னைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கடிதம் சம்பந்தமாக விசாரணைசெய்யுமாறு மீண்டும் இன்று பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

திருமதி ஸ்ரிமாவோ படித்த வீரக்கோனின் கடிதத்தில் காணப்பட்ட வாசகங்களில் என்னைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது பொய். அது ஒரு அபாண்ட பழி. எனக்கும் வீரக்கோனுக்குமிடையில் என்றுமே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கவில்லை.

என்னிடம் போதியளவு பணமிருக்கிறது. எனக்குப் பணத்தின்மீது ஆசையில்லை. நான் என்றுமே என் நாட்டுக்கும், மதத்துக்கும் துரோகம் செய்யும் துரோகியாக இருக்கமாட்டேன். என்னுடைய நாட்டை யாருக்கும் அடைகு வைக்கமாட்டேன்.

என்னை ஏசியும், நையாண்டி பண்ணியும், தூஷித்தும் எனக்கு பல கடிதங்கள் வந்திருக்கின்றன. 'அந்த'க் கடிதம் என் மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது.

தேசிய ஒற்றுமைக்கும் சுதந்திரத்துக்கும் ஆபத்து வருகிற நேரங்களில் கூட நான் தேசிய ஒற்றுமையைபேலட்சியமாகக் கொண்டிருந்திருக்கிறேன். சகலவற்றிலும் இந்நாடுசுதந்திரமாக இருக்க வேண்டுமென்பதே என் கொள்கை. அதற்காக என்றும் உழைப்பேன்.

என்னுயிரிலும் பார்க்க எனக்கு மதம்தான் பெரிது. அந்த மதத்தை நான் என்றும் விற்கமாட்டேன்.

---

கிரிக்கெட்

### மேற்கிந்திய கோஷ்டி வெற்றி

பெங்களூர், ஜன. 10

மேற்கிந்திய கோஷ்டிக்கும் தெற்குப் பிராந்தியக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், மேற்கிந்திய கோஷ்டி 94 ஓட்டங்களால் வெற்றி ஈட்டியது.

மேற்கிந்திய கோஷ்டி தனது முதலாவது இன்னிங்சில் 224 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் 168 ஓட்டங்களையும் எடுத்தது. தெற்குப் பிராந்தியக் கோஷ்டி முதல் இனிங்சில் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 236 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் 62ஓட்டங்களையும் எடுத்தது.

---

### குழந்தைக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவரது 5 வயது மகனை சிறீதரன் என்ற குழந்தை மிகவும் அபாயகரமான நிலையில் எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர்.

(ந.நி.)

---

### அமெரிக்க நடன.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வின நேரடித்தொடர்பு இதுவாகும், நடனத்தினூடாக சமயம், சாதி ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட ஒற்றுமையை ஏற்படுத்த முடிகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு உடல் இருக்கிறது. எனவே, அவற்றின் அசைவுகள் எதைக்குறிக்கின்றன என்பது அவர்களுக்குதெரியும் என்று திரு. போல் குறிப்பிட்டார்.

அமெரிக்க ராஜாங்க இலாகாவின் கலாச்சார பரிவர்த்தனை இட்டத்தின்கீழ் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள இக்குழுவினர் ஐக்கிய அரபுக்குடியரசு, இலங்கை இந்தியா ஆகியநாடுகளிலும் பின்னர் தைலாந்து, மலேஷியா, சிங்கப்பூர், ஹாங்காங், பிலிப்பைன்ஸ் தீவுகள், ஜப்பான், கொரியா முதலான நாடுகளிலும் நடன நிகழ்ச்சியை நடத்துவர்.

திரு. போல்ரெயினர் வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்திற்கு புதியவரல்ல. அவர் நடனத்தையும், சுற்றுப்பிரயாணத்தையும் ஒருங்கே இணைக்துள்ளார் என்றுல் ஆச்சரியமில்லையாகாது உலக நாடுகள் சுற்றுப்பிரயாணத்தை இவர் பதினொன்று தடவைகள் மேற்கொண்டுள்ளார். இவற்றில் நான்கு அமெரிக்க ராஜாங்க இலாகாவின் ஆதரவில் இடம்பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது. தாம் எந்தவொரு குறிப்பிட்ட நடனக்கோஷ்டியையும் சார்ந்தவனல்ல என்கிறார் திரு போல் ரெயினர். "எதனையும் பரீட்சார்த்தம் செய்வதில் எனக்கு பேரானவல் உண்டு" என்கிறார்.

---

மருந்தென நினைத்து

### அஸிட் குடித்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், புதன்

மருந்தென நினைத்து அஸிட்டைக் குடித்த இளைஞர் ஒருவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சங்கானையைச் சேர்ந்த வைத்தியலிங்கம் துரைசிங்கம் (22 வயது) என்ற இவ்விளைஞர் நெஞ்சுநோயினால் அவஸ்தைப்பட்டதால் ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து வாங்கிவந்து அதை ஒரு பெட்டிக்குள் வைத்தாகவும், சம்பவம் நடந்த தினத்தன்று இரவு 11 மணியளவில் மீண்டும் நோய் அதிகரிக்கவே பெட்டியைத் திறந்து அதற்குள் இருந்த அஸிட் போத்தலை எடுத்து மருந்தென்று குடித்ததாகவும், குடித்த சில மணி நேரங்களில் அவர் மயங்கிவிழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந. நி.)

---

### அகில இலங்கை..

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

பாடசாலைப் பிள்ளைகள் 12-ம் திகதி விவசாய அபிவிருத்திக்கானசுலோகங்களை கோஷித்துக் கொண்டு, சுலோக அட்டைகளுடன் சுந்தரோடைக்களூரிமைதானத்தை வந்தடைவர் மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் வானிதி ஆனந்தகுமாரசுவாமி, திரு. எஸ். தணிகாசலம், திரு. வி. தருமலிங்கம், திரு. க. பேரின்பநாயகம் போன்ற பிரமுகர்கள் சொற்பொழிவாற்றுவர். விழாவன்று 5000 மிளகாய்க் கன்றுகள் இலவசமாக வழங்கப்படும்.

---

### இடமாற்றங்கள்

அனுராதபுரம், செவ்

அனுராதபுரம்எம்.ஓ.எச் இல் கடமையாற்றிய அப்போதிக்கரி திரு. பொ. சந்திரசேகரம் பொத்துப்பிட்டியா ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

* * *

அனுராதபுரம் பெரியாஸ்பத்திரியில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய செல்வி சத்தியராணி அருணாசலம் காங்கேசந்துறை ஆஸ்பத்திரிக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

* * *

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலை கச்சேரியில் கடமையாற்றிய திரு. பொ. இராசரத்தினம் மின்னியாவுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

* * *

பரந்தன், செவ்.

களுவாஞ்சிக் குடியில் உபதபாலதிபராகக் கடமையாற்றிய திரு. எம். சி. தர்மலிங்கம் பரந்தன் தபாற்கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

### ஆங்கிலக்கல்வியில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிய நடவடிக்கை எடுக்குமாறுகேட்டுக்கொள்வதென டாக்டர் ஜி. பி. மலலசேகரா தலைமையில் நடைபெற்ற தேசிய கல்விச்சபை தீர்மானித்தது.

இப்பொழுதுள்ள மூன்று பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரைப் பூரணமாகப் பயன்படுத்துவது பற்றியும் சபை ஆலோசனை செய்தது.

கொழும்பில் தனியாக ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி ஆராய்ந்து முடிவு காணும் பொருட்டு டாக்டர் மலலசேகரா தலைமையில் உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

---

திருக்கோணமலைகடிதம்

# திருக்கோணமலை துறைமுகமும் கொந்தருத்துமுறையும்

## அன்புவழிபுர மக்கள் இருளில் மூழ்கின்றனர்

— நமது நிருபர் —

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தினால் முடிவு செய்யப்பட்ட அடையாள வேலை நிறுத்தம் ஒரு நாளின் போடப்பட்டுள்ளது இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவிருந்த அடையாள வேலை நிறுத்தம் இப்போது 16-ம் திகதிக்கென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

"இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் திருக்கோணமலைத் துறைமுகத்தில் மீண்டும் கொந்தருத்து முறையையே கையாள வேண்டுமெனக் கருதப்படுகிறது.

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தைப் பொறுத்த வரையில், இந்தத் துறைமுகத்தில் மீண்டும் கொந்தரூத்துமுறை சாத்தியமாகாதென்பதே அதன் கருத்து. இதற்குக் காரணமாக இங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு சட்டரீதியாகக் கொடுக்கப்பட வேண்டியிருந்த அவர்களது அக்டோபர் மாதத்துக்குரிய வேதனங்களும் முதலாளிமார்களினால் கொடுக்கப்படவில்லை. இந்தத் தொழிலாளர்களின் வேலைக்கு, அரசா[illegible] மீண்டும் முதலாளிமார்கள் இப்படியான கீழ்த்தரமான காரியங்களைச் செய்ய மாட்டார்களென்று என்ன நம்பிக்கை!" என்று இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. இப்பிரச்னைகள் யாவையும் தீர்த்து வைப்பதற்கு ஏதுவாக திருக்கோணமலைத் துறைமுகத்தைத் தேசிய மயமாக்குவதற்கு முடியாத காரணங்களை விளக்குமாறு இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. பாலா தம்பு அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளார்.

திருக்கோணமலைத் துறைமுகத் தொழிலாளர்களின் ஒரு பகுதியினரை பிரதிநிதித்துவம் வகிக்கும், ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் சங்கம், இலங்கை துறைமுகத் தொழிலாளர் கழகம் ஆகியன மீண்டும் கொந்தருத்துக் காரரின் கீழ் வேலை செய்ய இணக்கம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகின்றது. இருந்தபோதிலும் இத் தொழிலாளர்களுள் பெரும் பான்மையினரானவர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்துடன் அரசாங்கம் சுமுகமானதொரு முடிவுக்கு வராவிடின் இத்துறைமுகத்தில் மீண்டும் வேலை ஆரம்பிப்பது சாத்தியமானதென்பது மட்டுமல்லாமல் ஒரு சில வாரங்களில் இலங்கையில் சகல ஏற்றுமதி இறக்குமதிகளும் பெரிதும் பாதிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

### இருளில் மூழ்கிறது

திருக்கோணமலை நகர எல்லைக்குள் புதிய இருண்ட பகுதியாக அன்புவழிபுரம் உருவாகியிருக்கிறது.

1964ல் அன்புவழிபுரம் சந்தியில் எரிந்துகொண்டிருந்த மின்சார வெளிச்சம் அதே ஆண்டு டிசம்பர் மாதம் 22ந் தேதி வீசிய புயலினால் சேதப்பட்டபின்பு இன்றுவரை திருத்தப்படாமல் மின்சாரக் கம்பங்கள் மட்டும் காணப்படுகின்றன. நகர எல்லைக்குள் இப்படியான மின்சார வெளிச்சம் இல்லாத கம்பங்கள் இருப்பது எந்த நாட்டிலுமில்லாததொரு புதிய சாதனையாகும்.

மக்கள், பலதடவைகள் இந்த மின்சார வெளிச்சம் மீண்டும் பிரகாசிக்கச்செய்த முயற்சிகள் யாதொன்றும் பலனளிக்கவில்லை. புதிய இயந்திரம் கொண்டுவரப்பட்டு பல வருடங்களாக மழையிலும் வெய்யிலிலும் பழுதடைந்து வருகிறது. மக்களின் தேவையை பூர்த்திசெய்யமுடியாத அளவுக்குப் புதிய இயந்திரமும் பழுதடைந்துவிட்டது என்றே மக்கள் கவலையோடு பேசிக் கொள்கிறார்கள்.

---

### யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நான்கு கணக்குப்பரிசோதகர்கள் திடீரென நேற்று காலை கொழும்பிலிருந்து வந்தார்கள். இவர்கள் நேற்று ஆஸ்பத்திரி வார்டுகளிலும், மற்றும் அறைகளிலும் திடீர்சோதனையிட்ட போது பல களவாடப்பட்ட பொருள்கள் ஊழியர்களிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இதுபற்றிய பூரண விசாரணையொன்று நேற்றிரவு வரை நடைபெற்றதாகவும் தெரிகின்றது. இது சம்பந்தமாக ஆண் ஊழியர் ஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் தினமும் பல மருந்துகளும் குளிகை மருந்துகளும் புட்டிமருந்துகளும் களவாடப்பட்டுவருவதாக கொழும்புக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நான்கு கணக்குப் பரிசோதகர்களும் திடீர் சோதனைக்காக வந்துள்ளார்கள். நேற்று நடைபெற்ற இச்சோதனை காரணமாக ஆஸ்பத்திரி சமையலறையில் கடமையாற்றும் ஒருவரது பையொன்றிலிருந்து ஆஸ்பத்திரிக்குச்சொந்தமான சுமார் 30 முட்டைகளும், இன்னொருவரது பையிலிருந்து ஆஸ்பத்திரிக்குச்சொந்தமான பல துணிகளும் சோதனைக் குழுவினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகத்தெரிகிறது. இச்சோதனை தொடர்ந்து நடைபெறுகின்றது.

(ந. நி.)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டு க்காரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி[illegible] த்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 196[illegible] ஜனவரி 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org